**<u>சுருக்கம்</u>**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – 15 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.51** **நாள் 26.10.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**பிலவ – ஐப்பசி 9**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.95, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த் துறை, நாள் 03.11.2011.
2. அரசாணை (நிலை) எண்.59, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த் துறை, நாள் 25.09.2019.
3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.பி2/3783/2021, நாள் 17.09.2021.

* * * * *

**ஆணை:**

2021–2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது 15 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 கள்ளர் ஆரம்ப பள்ளிகளில் 2011–12 ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக LKG வகுப்புகள் துவங்க ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2011–2012 ஆம் கல்வியாண்டில் ஆங்கில வழியில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு அருகாமையில் உள்ள பின்வரும் 15 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டது.

1. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, செக்கானூரணி, மதுரை மாவட்டம்.
2. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, பூசலபுரம், மதுரை மாவட்டம்.
3. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, அ. பூச்சிப்பட்டி, மதுரை மாவட்டம்.
4. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, விக்கிரமங்கலம், மதுரை மாவட்டம்.
5. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, நாட்டாமங்கலம், மதுரை மாவட்டம்.
6. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, இராசதானி, தேனி மாவட்டம்.
7. அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, முத்தனம்பட்டி, தேனி மாவட்டம்.
8. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, கருநாக்கமுத்தன்பட்டி, தேனி மாவட்டம்.
9. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, ஏத்தக்கோவில், தேனி மாவட்டம்.
10. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, மார்கையன்கோட்டை, தேனி மாவட்டம்.
11. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, சென்னமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
12. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, அணைப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
13. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, கொண்டமநாயக்கன்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
14. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, தெப்பத்துப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
15. அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி, காமுபிள்ளைச்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகள் நடத்தும் திட்டம் பொதுமக்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பை பெற்றமையால், கள்ளர் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும், 2019–2020 ஆம் ஆண்டுகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்ட 15 பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழி சேர்க்கை பெற்ற மாணவர்கள் தற்போது 2021–2022 ஆம் கல்வியாண்டில் 8 ஆம் வகுப்பில் பயின்று வருகின்றனர் என்றும், அம்மாணவர்களுக்கு தொடர்ச்சியாக 9ஆம் வகுப்பில் உயர்நிலைக் கல்வியினை ஆங்கில வழிக் கல்வியிலேயே நடத்தும் பொருட்டு கூடுதல் ஆசிரியர் பணியிடங்களை ஒப்பளிக்காமல் அப்பள்ளிகளில் உபரி ஆசிரியர் பணியிடங்களில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நடத்திடவும், அதே சமயத்தில் ஆங்கில வழிக் கல்வி மாணவர்களுக்கான பாடபுத்தகங்கள் தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம் மூலம் வழங்கப்படுவதால் அப்பாடபுத்தகங்களை கொண்டு வகுப்புகள் நடத்திலாம் என்ற அடிப்படையில், இந்த 15 பள்ளிகளில் தற்போது 8 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ/மாணவியர் அதே பள்ளிகளில் தொடர்ந்து

9 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி பயிலுவதற்கேற்ப 9 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கிட அனுமதி அளிக்குமாறு அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் நன்கு பரிசீலித்து, 2019-2020 ஆம் ஆண்டில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்ட பத்தி 3-ல் குறிப்பிடப்பட்ட 15 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில், உயர்நிலைக் கல்வியினை மாணவ/மாணவியர் தொடர்ந்து ஆங்கில வழிக் கல்வியிலேயே பயில ஏதுவாக 9 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை-5.
இணை இயக்குநர் (க.சீ.), மதுரை-20.
மாவட்ட ஆட்சியர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
மாநிலக் கணக்காயர், சென்னை-18 / (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை- 20.
கருவூல அலுவலர்,
தேனி மற்றும் திண்டுக்கல்.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர், தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை.

நகல்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

26/10/2021
**பிரிவு அலுவலர்**
26.10.21